[2022] 7 எஸ்.சி.ஆர். 1176

இந்திய உச்சநீதிமன்றம்

மே 09, 2022

முன்னிலை

மாண்புமிகு நீதியரசர் திரு. அஜய் ரஸ்தோகி

மற்றும்

மாண்புமிகு நீதியரசர் திரு. சி.டி.ரவிகுமார்

குற்றவியல் மேல்முறையீடு 937/2022

போலா கும்ஹர்

எதிர்

சத்தீஸ்கர் மாநிலம்

இந்திய அரசியலமைப்பு சட்டம் – வகுமுறைக்கூறு *19(1)(டி),21*- சட்ட விரோதமாக தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுளள குற்றவாளிகள் சிறைத் தண்டனைக் காலத்திற்கு அதிகமாக சிறையில் அடைக்கப்பட்டனர் - மேல்முறையீட்டாளர் இதச பிரிவு *376* மற்றும் பட்டியலின வகுப்பினர் மற்றும் பட்டியலின பழங்குடியினர் *(*வன்கொடுமை தடுப்பு*)* சட்டம் *1989* இன் பிரிவுகள் *3(ii)(v)* மற்றும் *3(1)(xii)* இன் கீழ் குற்றவாளி எனத் தீர்ப்புப் பெற்றார் - ஆண்டுகள்

கடுங்காவல் சிறைத்தண்டனை மற்றும் ரூ.10.000/- அபராதம் செலுத்தவும், தவறினால் மேலும் ஓராண்டு சிறைத்தண்டனையை அனுபவிக்க வேண்டும் என்று தீர்ப்பளித்தார்- மேல்முறையீட்டில் உயர்நீதிமன்றம், குற்றத்தீர்ப்பை உறுதி செய்தது ஆனால் 12 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத்தண்டனையை 7 ஆண்டுகளாக குறைத்தது - மேலும், பாதிக்கப்பட்டவருக்கு ஆறு மாத காலத்திற்குள் 15,000 ரூபாய் இழப்பீடு வழங்க உத்தரவிடப்பட்டது - மேல்முறையீட்டாளர் 10 ஆண்டுகள் 03 மாதங்கள் மற்றும் 16 நாட்களுக்கு கடுமையான சிறைத்தண்டனை தண்டனை குறைப்புடன் அனுபவித்துள்ளார் - மேல்முறையீட்டாளர் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பின் அடிப்படையில் சிறைத்தண்டனை காலத்தை தாண்டி காவலில் வைக்கப்பட்டார் - தண்டனைக் காலத்தை தாண்டி சிறையில் அடைக்கப்பட்டதற்காக நஷ்ட ஈடு கோரி மேல்முறையீட்டாளர் உச்சநீதிமன்றத்தை அணுகினார் - தீர்முடிவு: மேல்முறையீட்டாளரின் தண்டனையைக் குறைத்த உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பைக் கடைப்பிடிக்காததற்கு எந்த நியாயமும் இல்லை - இந்திய அரசியலமைப்பின் 19 (1) (d) பிரிவு மட்டுமின்றி, 21வது பிரிவு மீறல் - பண ரீதியான இழப்பீட்டைப் பெற மேல்முறையீட்டாளருக்கு உரிமை உண்டு - ரூ. 7.5 லட்சம் நஷ்ட ஈடு, அரசு அதிகாரிகள் செய்த செயல்/செயலற்ற செயல்களுக்காக மாநில அரசு பொறுப்பேற்க வேண்டும் - குற்றவியல் விசாரணைமுறை சட்டம், 1973 -

பிரிவுகள் *386, 357* - மத்திய பிரதேச சிறைக் கையேடு *1968* - விதி *2(ஜி)* - மத்திய பிரதேச சிறைச்சாலை விதிகள், *1968* - விதி *715.*

மேல்முறையீட்டை தள்ளுபடி செய்த நீதிமன்றத்தின் தீர்வுகள் பின்வருமாறு

தீர்முடிவு: இந்த நீதிமன்றம் மேல்முறையீட்டாளர் கடுமையான குற்றத்தில் குற்றவாளி எனக் கருதப்பட்டதை மறந்துவிடவில்லை - ஆனால், ஒரு குற்றவாளியை குற்றவாளியாக கண்டறிந்து, மேல்முறையீட்டில், தண்டனை உறுதி செய்யப்பட்ட பின்னர் தண்டனை மாற்றப்பட்டு, மேல்முறையீட்டு தீர்ப்பு இறுதியானதாக மாறிவிட்டால், குற்றவாளியை, அந்த மேல்முறையீட்டு தீர்ப்பின் அடிப்படையில் சட்டப்பூர்வமாகக் காவலில் வைக்கக்கூடிய காலம் வரை மட்டுமே தடுத்து வைக்க முடியும். அத்தகைய குற்றவாளி உண்மையான விடுதலை தேதிக்கு பின்னால் விடுவிக்கப்பட்டால், சட்டத்தின் ஒப்பளிப்பு இல்லாமல் சிறை அல்லது தடுப்பு காவலில் வைத்ததாகும், இது இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் வகுமுறைக்கூறு 19(டி)ஐ மீறுவது மட்டுமல்லாமல் வகுமுறைக்கூறு 21 ஐ மீறுவதாகும். மேல்முறையீட்டாளரால் நீண்டகாலமாக இதுதான் அனுபவிக்கப்பட்டது. மேல்முறையீட்டாளர் ஒரு இளைஞர் என்ற பொருண்மையையும், தண்டனைக் காலத்திற்கு அப்பால் இந்த நீண்ட மற்றும்

சட்டவிரோத சிறைத்தண்டனை அனுபவித்துள்ளார் என்பதையும், சுதந்திரமாக நடமாடுவதற்கான உரிமை நீண்ட காலமாக சட்டவிரோதமாக பறிக்கப்பட்டுள்ளது என்பதையும், இதன் மூலம், இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் வகுமுறைக்கூறு 19 (டி) இன் கீழ் உரிமை மீறல், , இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் வகுமுறைக்கூறு 21 இன் கீழ் வாழ்க்கை மற்றும் தனிப்பட்ட சுதந்திரத்திற்கான உரிமை மீறல் ஏற்பட்டுள்ளது என்பதையும் மற்றும் அத்தகைய கூடுதல், சட்டவிரோத தடுப்பு காரணமாக ஏற்படும் மன வேதனை மற்றும் வலி ஆகியவற்றையும் கருத்தில் கொண்டு, மேல்முறையீட்டாளருக்கு பணமாக இழப்பீடு பெற உரிமை உண்டு என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது.

ருடால் ஷா எதிர் பிஹார் மாநிலம் (1983) 4 எஸ்சிசி 141 :[1983] 3 எஸ்சிஆர் 508; அம்பிகா குவாரி வொர்க்ஸ் எதிர் குஜராத் மாநிலம் ஏஐஆர் 1987 எஸ்சி 1073: [1987] 1 எஸ்சிஆர் 562; ஏ.ஆர். அந்துலே எதிர் ஆர்.எஸ். நாயக் (1988) 2 எஸ்சிசி 602: [1988] 1 சப் எஸ்சிஆர் 1 – குறிப்பிடபடுகிறது.

பார்வையிடப்பட்ட தீர்முடிவுகள்

[1983] 3 எஸ்சிஆர் 508	குறிப்பிடபடுகிறது	பத்தி 1
[1987] 1 எஸ்சிஆர் 562	குறிப்பிடபடுகிறது	பத்தி18
[1988] 1 சப் எஸ்சிஆர்	குறிப்பிடபடுகிறது	பத்தி19

குற்றவியல் மேல்முறையீட்டு அதிகாரவரம்பு: குற்றவியல் மேல்முறையீட்டு எண் 937 / 2022

பிலாஸ்ப்பூரில் உள்ள சத்திஸ்கர் உயர்நீதிமன்றத்தின் குற்றவியல் மேல்முறையீடு எண் 110/2015 வில் 11.07.2018/19.07.2018 தேதியிட்ட தீர்ப்பு மற்றும் உத்தரவிற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டது.

மேல்முறையீட்டாளருக்காக ஏ. சிராஜுதீன், மூத்த வழக்கறிஞர், திலக் ராஜ் பாசி, பர்ணம் பிரபாகர், இ.கீர்த்தி, எச்.ராஜசேகர், சத்யபால் குஷால் சந்த் பாசி ஆகியோர் முன்னனிலையானார்கள்.

எதிர்மேல்முறையீட்டார்களுக்காக வழக்குரைஞர்கள் சௌரவ் ராய், துணை தலைமை வழக்கறிஞர், மகேஷ் குமார், பிரபுத் சிங், கௌஷல் சர்மா,

ஸ்ரீனிவாச குமார் போகிசம், திருமதி. தேவிகா கண்ணா, திருமதி. வி.டி. கன்னா, விளம் இஸ்ட் சேம்பர்ஸ் ஆகியோர் முன்னிலையானார்கள்.

தீர்ப்புரை

இந்நீதிமன்றத்தின் தீர்ப்பு மாண்புமிகு நீதியரசர் திரு.சி.டி.ரவிக்குமார் அவர்களால் வழங்கப்பட்டது

இந்த மேல்முறையீடானது, மனுதாரரை இந்திய தண்டனை சட்டம் (இ.த.சா.) பிரிவு 376 இன் கீழ் குற்றவாளி எனது தீர்ப்பிட்டு குற்றவியல் மேல்முறையீடு எண் 110/2015 இல் பிலாஸ்பூரில் உள்ள சத்திஸ்கர் உயர்நீதிநீதிமன்றத்தில் பிறப்பிக்கப்பட்ட 19.07.2018 தேதியிட்ட தீர்ப்பு மற்றும் உத்தரவிற்கெதிராக சிறப்பு அனுமதியின் பேரில் தாக்கல் செய்யப்பட்டது, இதன்மூலம் தண்டனை 12 ஆண்டுகளிலிருந்து 7 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத்தண்டனையாக குறைக்கப்பட்டது. இந்த அறிவிப்பு 04.03.2022 அன்று வெளியிடப்பட்டது. ஆனால், இந்த உத்தரவும், அதன்பிறகு வெளியிடப்பட்ட 22.03.2022-ம் தேதியிட்ட உத்தரவும், இது உண்மையிலேயே ஒரு வரையறுக்கப்பட்ட உத்தரவு என்பதை வெளிப்படுத்துகிறது.

அதன்படி அனுமதி வழங்கப்பட்டது.

ஒரு குறுகிய முன்னோட்டமானது வரையறுக்கப்பட்ட கேள்வியை அதாவது, தண்டனைக் காலத்திற்கு அப்பால் சிறையில் வைக்கப்பட்டிருப்பதற்கும், இதனால் தனிப்பட்ட சுதந்திரத்தை நீடித்த முறையில் பறிப்பதற்கும் மேல்முறையீட்டாளருக்கு இழப்பீடு வழங்கப்படுகிறதா? (நாம் விவாதிக்க விரும்பும்) பரிசீலனை செய்வது பயனுள்ளதாக இருக்கும்.

1. ருதுல் சஹா வழக்கில் தீர்ப்பை வெளியிடுகையில், இந்த நீதிமன்றம் ஒரு தீவிரமான நம்பிக்கையை வெளிப்படுத்தியது.

"இந்த உத்தரவு மனுதாரர் மாநிலம் மற்றும் அதன் தவறான அதிகாரிகளிடமிருந்து முறையான சேதங்களை மீட்டெடுக்க ஒரு வழக்கை கொண்டு வருவதைத் தடுக்காது. எங்களால் நிறைவேற்றப்பட்ட இழப்பீட்டின் உத்தரவு, நாங்கள் மேலே கூறியது போல், ஒரு தற்காலிக நிவாரணத்தின் அடிப்படியில் அமைகிறது. மனுதாரரை அவரது வழக்கு, பல மேல்முறையீடுகள் மற்றும் நிறைவேற்றுகை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பணமில்லாமல் விட்டுவிட முடியாது. இழப்பீட்டு வழக்குகளில் நிதானமாக நடைபெறும் உண்மைகள் மற்றும் சட்டங்கள் பற்றிய முழுமையான விவாதம் ஏழை

ருதுல் ஸாஹ்ு வழக்குத் தாக்கல் செய்யும் வரை காத்திருக்க வேண்டும். இந்த வழக்கில் இந்த வாதங்களை எழுப்ப லேவியத்தானுக்கு சுதந்திரம் இருக்கும். அதுவரை, பீகாரிலோ அல்லது வேறு எங்கோ ருதுல் சாஹ்கள் இருக்க மாட்டார்கள் என்று நம்புகிறோம்."

முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

இந்த வழக்கில் ருதுல் ஸாஹ்ு, பீகார் மாநிலம் முசாஃபர்பூர் அமர்வு நீதிமன்றம் 1968 ஜூன் 3 ம் தேதி வழக்கில் இருந்து விடுவித்திருந்தாலும், அவர் விடுவிக்கப்பட்ட 14 ஆண்டுகளுக்குப் பின், அவர் 1982-ம் ஆண்டு அக்டோபர் 16 ம் தேதிதான் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டார். சிறையில் அவர் சட்டவிரோதமாக தடுத்து வைக்கப்பட்டிருப்பதால், அவரை விடுதலை செய்ய கோரி இந்த நீதிமன்றத்தில் ஆட்கொணர்வு மனு தாக்கல் செய்யப்பட்டது. கூடுதலான நிவாரணங்களும் கோரப்பட்டன. இந்த நீதிப்பேராணை மனு 22.11.1982 அன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, பீகார் மாநிலத்திற்காக முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர் மேல்முறையீட்டாளர் சிறையில் இருந்து விடுவிக்கப்பட்டதாக இந்த நீதிமன்றத்திற்கு அறிவித்தார்.

சிறையில் இருந்து விடுதலை செய்யப்பட வேண்டும் என்ற வேண்டுரை பயனற்றதாகிப்போனாலும், இந்த நீதிமன்றம் கோரப்பட்ட மற்ற நிவாரணங்கள் தொடர்பான நீதிப்பேராணை மனுவை பரிசீலித்து, அவரது விடுதலைக்குப் பிறகு அவர் தடுத்து வைக்கப்படுவது முற்றிலும் நியாயமற்றது என்று தீர்ப்பளித்தது. இதனால், இந்த நீதிமன்றம் தீர்வளித்ததாவது:"எனவே, மனுதாரரின் உரிமைகளுக்கு அரசின் அதிகாரிகள் ஏற்படுத்திய சேதத்தை அரசு சரிசெய்ய வேண்டும். அந்த அதிகாரிகளுக்கு எதிராக அது உதவக்கூடும்" அதன்பிறகு, அந்த நீதிப்பேராணை மனு மேற்கூறிய முறையில் மற்றும் மேலே கூறப்பட்ட வலுவான நம்பிக்கையுடன் தீர்வளிக்கப்பட்டது.

2. மேல்முறையீட்டாளரின் வழக்கு அவரது விடுதலையில் முடியாமல், குற்றச்சாட்டை உறுதி செய்து சிறை தண்டனையை குறைப்பதன் மூலம் முடிவடைவதால் அவரை மற்றொரு ருதுல் சஹ் என்று கூற முடியாது என்பது உண்மைதான். ஆயினும்கூட, கீழே விளக்கப்படும் அவரது வழக்கு, நீதிமன்றத்தின் இறுதித் தீர்ப்பைப் பொருட்படுத்தாமல், ஒரு தண்டனைக் காலத்திற்கு அப்பால் ஒரு குற்றவாளியை சிறையில் வைத்திருப்பதன் மூலம் ஒரு மாநில அரசு (நிச்சயமாக, அதன் அதிகாரிகள்) தொடர்ந்து அவமதிப்புச் செயலை செய்ததை வெளிப்படுத்துகிறது. வேறு எந்த வழக்கு தொடர்பிலும் அவரது தொடர்ச்சியான சிறைவாசம் தேவையில்லாதபோது இதுபோன்ற ஒரு

செயல் நியாயமற்றது மற்றும் பாதுகாக்க முடியாதது. இந்த வகையான அசௌகரியத்தை தளர்வான முறையில் பார்க்க முடியாது, அதை முறையாகக் கருத்தில் கொள்ள வேண்டிய நேரம் இது. சுதந்திரமாக நடமாடுவது, சட்டத்தின்படி முறையான வழக்கு விசாரணைக்குப் பிறகு சிறைவாசம் அல்லது தடுப்புக்காவல் மூலம் கட்டுப்படுத்தப்படலாம் அல்லது பறிக்கப்படலாம். சட்டத்தின் அனுமதியின்றி சிறைவாசம் அல்லது தடுப்புக்காவல் என்பது இந்திய அரசியலமைப்பு சட்டத்தின்படி வகுமுறைக்கூறு 19 (டி) மற்றும் 21 கீழ் உள்ள உரிமைகளை மீறுவதாகும்.

இந்த வழக்கில் மேல்முறையீட்டாளர் போலா குமார் இந்திய தண்டனை சட்டத்தின் பிரிவு 376 இன் கீழான குற்றம் மற்றும் பட்டியல் வகுப்பினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்பு) சட்டம் 1989 ஆகியவற்றின் கீழ் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறார். இதச 376 பிரிவின் கீழ் தண்டிக்கப்படும் குற்றத்திற்காக குற்றத்தீர்ப்பு அளிக்கப்பட்டு 12 ஆண்டுகள் கடுமையான சிறைத்தண்டனை மற்றும் ரூ.10,000/- அபராதம் விதிக்க வேண்டும் என்று தீர்ப்பளிக்கப்பட்டது. இதை எதிர்த்து அவர் மேல்முறையீடு செய்கையில், மேலும் குற்றவியல் மேல்முறையீட்டு எண் 110/2015 இல் பிலாஸ்பூரில் உள்ள சத்தீஸ்கர் உயர்நீதிமன்றம் தண்டனையை உறுதிப்படுத்தியது, ஆனால் அவரது தண்டனையை 12 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத்தண்டனையை 7 ஆண்டு

சிறைத்தண்டனையாக குறைத்தது. மேலும், குற்றவியல் விசாரணை முறை சட்டம் 1973 இன் 357 வது பிரிவின் கீழ் பாதிக்கப்பட்டவருக்கு ஆறு மாத காலத்திற்குள் 15,000 ரூபாய் இழப்பீடு வழங்கவும் உத்தரவிடப்பட்டது. 10,000/- அபராதம் செலுத்தவும், தவறும்பட்சத்தில் ஒரு வருடத்திற்கு சிறைத்தண்டனை அனுபவிக்கவும் வழங்கப்பட்ட தண்டனை நிலுவையில் உள்ளது. சிறப்பு அனுமதி மனுவில் நிறைவேற்றப்பட்ட 4.3.2022 மற்றும் 21.3.2022 தேதியிட்ட உத்தரவுகள், குற்றத்தீர்ப்பு மற்றும் தண்டனையில் தலையிட விரும்பாததை பிரதிபலிக்கிறது, ஆனால் மேல்முறையீட்டாளர் ஏன்உயர்நீதிமன்றத்தின் 19.07.2018 தீர்ப்பின் அடிப்படையில் நீதித்துறைக் காவலில் வைக்கும் காலத்தை விட அதிகமான காவலில் வைக்கப்பட்டார் என்ற கேள்வியை விசாரிப்பதற்கான விருப்பத்தை சுட்டிக்காட்டுகிறது.

4. 04.03.2022 அன்று விசாரணைக்கு வந்தபோது, சிறப்பு அனுமதி மனு தாக்கல் செய்வதில் தாமதத்தை இந்த நீதிமன்றம் மன்னித்ததுடன், எதிர்ப்புக்குள்ளான தீர்ப்பின் விதிக்கப்பட்டுள்ள தண்டனையை முழுவதுமாக அனுபவித்தும் மேல்முறையீட்டாளர் விடுவிக்கப்படவில்லை என்ற மேல்முறையீட்டாளருக்காக (உண்மையில், நீதிமன்ற உதவுநர்) முன்னிலையான கற்றறிந்த மூத்த வழக்கறிஞர் அளித்த அறிக்கையை கவனத்தில் கொண்டது. இந்த நீதிமன்றம் பின்வரும் உத்தரவை பிறப்பித்தது:

"மனுதாரருக்காக முன்னிலையான கற்றறிந்த மூத்த வழக்கறிஞர், மனுதாரர் இதச பிரிவு 376 இன் கீழ் தண்டிக்கப்படக்கூடிய குற்றத்திற்காக குற்றவாளி எனக் கண்டறியப்பட்டு, உயர்நீதிமன்றத்தால் 19.07.2018 தேதியிட்ட எதிர்ப்புக்குள்ளான தீர்ப்பின் கீழ் 7 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டதாகவும், மனுதாரர் எதிர்ப்புக்குள்ளான தீர்ப்பின் அடிப்படையில் முழு தண்டனையை அனுபவித்த போதிலும், அவர் இன்னும் விடுவிக்கப்படவில்லை என்றும் கூறுகிறார், மேலும் அம்பிகாபூர், சுர்குஜா மத்திய சிறைச்சாலை கண்காணிப்பாளர் (சி.ஜி.) அவர்களின் சிறைச்சாலை பதிவுகளை புதுப்பிக்கவில்லை என்பது பதிவு செய்யப்பட்ட சான்றிதழிலிருந்து தெரியவருகிறது.

14.03.2022 அன்று பதிலளிக்கப்படும் வகையில் அறிவிப்பு அனுப்ப உத்தரவிடப்படுகிறது.

மனுவின் நகல் சத்தீஸ்கர் மாநிலத்தின் நிரந்தர வழக்கறிஞருக்கு கூடுதலாக வழங்கப்பட வேண்டும்."

5. 21.03.2022 அன்று இந்த நீதிமன்றம் பின்வரும் உத்தரவை பிறப்பித்தது:

"நவம்பர் 9, 2021 தேதியிட்ட காவலில் வைப்புச் சான்றிதழில் இருந்து மனுதாரர் 10 ஆண்டுகள் 03 மாதங்கள் மற்றும் 16 நாட்கள் காவலில் வைக்கப்பட்டிருந்ததாக தெரியவந்துள்ளது, உயர்நீதிமன்றம் தண்டனையை உறுதிப்படுத்தி, தண்டனையை 07 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத்தண்டனையாக குறைத்தது. உயர்நீதிமன்றத்தால் எதிர்ப்புக்குள்ளான தீர்ப்பின் அடிப்படையில் மனுதாரர் 7 ஆண்டுகள் முழு தண்டனையை அனுபவித்த போதிலும், அவர் இன்னும் விடுவிக்கப்படவில்லை என்றும், இந்த மனுவின் அறிவிப்பு வழங்கப்பட்ட பின்னர், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மனுதாரரை மார்ச் 16, 2022 அன்று விடுவித்தனர் என்று மார்ச் 4, 2022 அன்று மனுதாரரின் வழக்கறிஞரின் மனு இந்த நீதிமன்றத்தால் பதிவு செய்யப்பட்டது. இது பிரச்சினையின் முடிவாக இருக்காது. இந்த நீதிமன்றத்திற்கு பிரதிபலிக்கப்படும் கருத்தில் மேலும் விசாரணை தேவை.

உயர்நீதிமன்றத்தின் 2018 ஜூலை 19ம் தேதியிட்ட தீர்ப்பின் அடிப்படையில், நீதித்துறைக் காவலில் வைக்கும் காலத்தை விடவும் அதிக நாட்கள், மனுதாரர் ஏன் காவலில் வைக்கப்பட்டார் என்பதை விளக்குமாறு மாநிலத்தின் வழக்கறிஞர் ஒரு ஆணையுறுதி

ஆவணத்தை தாக்கல் செய்ய வேண்டும். அதே சமயம், மாநிலம் முழுவதிலும் இருந்து தரவுகளை சேகரித்து, இந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள சம்பவம் குறித்து இந்த நீதிமன்றத்திற்கு ஒரு அறிக்கையை வழங்கலாம்.

இந்த உத்தரவின் நகலை சத்திஸ்கர் மாநில சட்ட உதவிகள் ஆணையத்தின் செயலாளருக்கு அனுப்பி உரிய நடவடிக்கைகளை எடுக்கவும் இணக்க அறிக்கை அனுப்ப வேண்டும். ''

முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

7. 21.03.2022 தேதியிட்ட உத்தரவு, மேல்முறையீட்டாளர் சார்பில், 10 ஆண்டுகள் 03 மாதங்கள் மற்றும் 16 நாட்களுக்கு கடுங்காவல் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டதாக வாதிடப்பட்டது என்று வெளியாகிறது. இப்போது, எதிர்க்கும் வகையில், மேல்முறையீட்டாளர் அனுபவித்த மொத்த தண்டனை (மன்னிப்புக் காலத்தை தவிர்த்து) 8 ஆண்டுகள் 01 மாதம் மற்றும் 29 நாட்கள் மட்டுமே என்று எதிர்மேல்முறையீட்டாளர் கூறுவார். குற்றம் சாட்டப்பட்ட தீர்ப்பின்படி, பாதிக்கப்பட்டவருக்கு 15,000 ரூபாய் இழப்பீடு செலுத்த தவறியதால், 7 ஆண்டு காலத்திற்கு மேல் ஒரு வருடம் சிறைத்தண்டனை

அனுபவிக்க வேண்டியதாயிற்று என்று ஆணையுறுதி ஆவணத்தில் கூறப்பட்டுள்ளது.

8. மேல்முறையீட்டாளரின் வழக்கறிஞர், மேற்கூறிய சூழ்நிலைகளில், மேல்முறையீட்டாளர் சட்டப்பூர்வமாக அனுமதிக்கப்பட்ட சிறைத்தண்டனை காலத்திற்கு அப்பால் சட்டவிரோதமாக தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக வாதிட்டார். துல்லியமாகச் சொல்வதானால், 09.11.2021 தேதியிட்ட தடுப்புகாவல் சான்றிதழில் வெளிப்படுத்தப்பட்டுள்ளபடி, 10 ஆண்டுகள் 03 மாதங்கள் மற்றும் 16 நாட்களுக்கு சிறைத்தண்டனை அனுபவித்தவர் என்று கூறப்படுகிறது. இந்த சூழலில், அம்பிகாபூர் மத்திய சிறைச்சாலை கண்காணிப்பாளரால் வழங்கப்பட்ட சிறைச்சாலைச் சான்றிதழைப் பற்றி விரிவாகப் பார்க்க வேண்டும். 7 முதல் 12 வரையிலான வரிசை எண்களுக்கு எதிராக அதில் உள்ள உள்ளீடுகள் வழக்கின் நோக்கத்திற்காக பொருத்தமானவை, அவை பின்வருமாறு வழங்கப்படுகிறது:

"7]தீர்ப்பு - 12 ஆண்டுகள்

8] நீதிமன்றத்தின் பெயர் - மாண்புமிகு சிறப்பு நீதிபதி, (பட்டியல் சாதி மற்றும் பட்டியல் பழங்குடியினர் வன்கொடுமை தடுப்பு சட்டம்), ஜாஷ்பூர் (சி.ஜி.)

9] விசாரணை காலத்தில் - ஆண்டு- 00, மாதம்- 10, நாள்- 10

10] தண்டனைக் காலம் - ஆண்டு- 06, மாதம்- 11, நாள்- 10

11] சிறை விடுதலை - ஆண்டு- 02, மாதம்- 05, நாள்- 26

12] 09-11-2021 நிலவரப்படி மொத்த தண்டனை காலம்- ஆண்டு- 10, மாதம்- 03, நாள்- 16"

9. மேற்கண்ட பகுதி, 09.11.2021 நிலவரப்படி., மொத்த தண்டனைக் காலம் 10 ஆண்டுகள் 03 மாதங்கள் மற்றும் 16 நாட்களாக இருந்தது என்பதை வெளிப்படுத்துகிறது. மேலும் தண்டனைத் தீர்ப்பு பெற மேல்முறையீட்டாளருக்கு உரிமையுள்ளது, மேலும், 02 ஆண்டுகள் 05 மாதங்கள் மற்றும் 26 நாட்கள் சிறை தண்டனைக்குரிய குறைப்பு காலமாக இருந்தது. மேற்கூறிய அம்சங்களை மனதில் கொண்டு, ஆணையுறுதி ஆவணத்தில் 16 மற்றும் 17 வது பத்திகளில் கூறப்பட்டுள்ள அறிக்கைகள் ஆராயப்பட வேண்டும். அது பின்வருமாறு:-

> 16. எதிர்ப்புக்குள்ளான உத்தரவின் மூலம் மாண்புமிகு உயர்நீதிமன்றம் மனுதாரரின் தண்டனையை ஏழு (7) ஆண்டுகள் கடுங்காவல் தண்டனையும் ரூ. 10,000/- அபராதமும் (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) அல்லது அதைத் தவறும்பட்சத்தில் ஒரு ஆண்டு சிறைத்தண்டனையும் மேலும் பாதிக்கப்பட்டவருக்கு இழப்பீடாக ரூ. 15,000/- (ரூபாய் பதினைந்தாயிரம் மட்டும்) வழங்கவும் தவறும் பட்சத்தில் தவறும்பட்சத்தில் ஒரு (1) வருடம்

சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது. மனுதாரர் அனுபவித்த உண்மையான தண்டனை (மன்னிப்புக் காலத்தை தவிர்த்து)பின்வருமாறு:

அ) விசாரணைக் காலத்தில்: 10 மாதங்கள் மற்றும் 10 நாட்கள்

ஆ) தண்டனைக் காலம் (2014 நவம்பர் 29 முதல் 2022 மார்ச் 16 வரை): 7 ஆண்டுகள் 3 மாதங்கள் மற்றும் 19 நாட்கள்.

17. எனவே மனுதாரர் அனுபவித்த மொத்த தண்டனை (மன்னிப்புக் காலத்தை தவிர்த்து) 8 ஆண்டுகள் 1 மாதம் 29 நாட்கள் ஆகும். உயர்நீதிமன்றம் உத்தரவிட்டபடி, பாதிக்கப்பட்டவருக்கு 15,000 ரூபாய் இழப்பீடு செலுத்தாததால், உயர்நீதிமன்றம் விதித்த 7 ஆண்டு சிறைத்தண்டனைக்கு மேலதிகமாக, அவருக்கு மேலும் ஒரு (1) ஆண்டு சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டியதாயிற்று."

10. 21.03.2022 தேதியிட்ட உத்தரவுக்கு இணங்க எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட ஆணையுறுதி ஆவணத்தில் உள்ள மேற்கூறிய அறிக்கைகளின்படி, தண்டனை குறைப்புக்காலம் தவிர்த்து,

மேல்முறையீட்டாளர் 08 ஆண்டுகள் 01 மாதம் 29 நாட்களுக்கு சிறைத்தண்டனை அனுபவித்துள்ளார். பாதிக்கப்பட்டவருக்கு இழப்பீடு வழங்க தவறியதன் காரணமாக, எதிர்ப்புக்குள்ளான தீர்ப்பிற்குட்பட்டு, அவர் அனுபவித்து வந்த சிறைத்தண்டனை காலத்துடன் கூடுதலாக 01 வருட சிறைத்தண்டனையை அவர் அனுபவிக்க நேரிடும் என்று அதில் கூறப்பட்டுள்ளது. ஏழு வருட காலத்திற்கு கூடுதலாக, மேல்முறையீட்டாளர் அபராதத் தொகையை செலுத்தத் தவறியதன் காரணமாக கூடுதலாக ஒரு வருட சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டியிருந்தது என்று மேற்கூறிய பத்திகளில் இருந்து வெளிவந்த ஆணையுறுதி ஆவணம் எதிர்மேல்முறையீட்டாளரின் நிலைப்பாட்டைக் காட்டுகிறது.

மேல்முறையீட்டாளருக்கு அமர்வு நீதிமன்றம் விதித்த தண்டனைக்கு மாற்றாக உயர்நீதிமன்றம் வழங்கிய சிறைத்தண்டனை காலத்திற்கு அப்பால் அவர் தடுத்து வைக்கப்படுவதை எதிர்மேல்முறையீட்டாளர் மேற்கூறிய முறையில் நியாயப்படுத்த முயற்சிக்கிறார். இந்த பிரச்சினையை நாம் பின்னர் கையாள்வோம்.

11. இந்த விடயத்தை முறையாக ஆராய்வதற்கு பின்வரும் அம்சங்களைக் குறிப்பிடுவது பொருத்தமானது:

மத்தியப் பிரதேச மறுசீரமைப்புச் சட்டம், 2000 (28/ 28) இன் பிரிவு 79 ன் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி, ஜூன் 14, 2001 தேதியிட்ட அறிவிப்பு எண். எஃப்-2/13/சிறை/2001 இன் படி, 2001 ஆம் ஆண்டின் சட்டங்களின் ஏற்பாட்டின் படி மாநில அரசு சட்டத்தின் ஆணையை ஏற்றுக்கொள்வது (அடாப்டேஷன் ஆஃப் லாஸ் ஆர்டர்), 2001' என்ற உத்தரவை நிறைவேற்றியது, இது சத்திஸ்கர் மாநிலம் முழுவதும் நவம்பர் 1, 2000 அன்று நடைமுறைக்கு வந்தது. மத்தியப் பிரதேச சிறை கையேடு, 1968-ஐ சத்தீஸ்கர் மாநிலம் ஏற்றுக்கொண்டது என்பதை அட்டவணை வெளிப்படுத்தும். அது இன்னும் நடைமுறையில் உள்ளது. மத்தியப் பிரதேச சிறை கையேடு, 1968-ன் முதல் பகுதியின் விதி 1 ல், விதிகளின் பெயர் "மத்தியப் பிரதேச சிறைச்சாலை விதிகள், 1968" என்று வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அதன் விதி 2 (ஜி) பின்வருமாறு "தண்டனையை" வரையறுக்கிறது.

> "2(ஜி). "தண்டனை" என்பது மேல்முறையீடு, மறுஆய்வு அல்லது வேறு விதத்தில் இறுதியாக நிர்ணயிக்கப்பட்ட தண்டனை என்று பொருள்படும், மேலும் இதில் ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளும் அடங்கும் மற்றும் சமாதானத்தை அல்லது நல்ல நடத்தைகளை பராமரிப்பதற்கான உத்தரவாதத்தை வழங்காத நிலையில் காவலில் ஒப்படைப்பு அல்லது தடுப்புக் காவல் வைப்பு ஆகியவற்றை உள்ளடக்கியது."

12. எனவே, சத்தீஸ்கர் மாநிலத்தில், மத்தியப் பிரதேச சிறை விதிகள், 1968 நடைமுறையில் உள்ளது என்பது தெளிவாகிறது. அதன்படி, "தண்டனை" என்ற சொல் மேல்முறையீடு, மறுஆய்வு அல்லது வேறு விதத்தில் இறுதியாக நிர்ணயிக்கப்பட்ட தண்டனை என்று பொருள்படும், மேலும் இதில் ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளும் அடங்கும் மற்றும் சமாதானத்தை அல்லது நல்ல நடத்தைகளை பராமரிப்பதற்கான உத்தரவாதத்தை வழங்காத நிலையில் காவலில் ஒப்படைப்பு அல்லது தடுப்புக் காவல் வைப்பு ஆகியவற்றை உள்ளடக்கியது. முன்னர் கூறப்பட்டபடி, இந்த வழக்கில், ஜஷ்பூரில் உள்ள பட்டியலிடப்பட்ட சாதிகள் மற்றும் பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்பு) சட்டத்தின் சிறப்பு நீதிபதியின் நீதிமன்றம், மேல்முறையீட்டாளர் மீது வழக்குத் தொடுத்தது, இதச பிரிவு 376 இன் கீழ் தண்டிக்கப்படும் குற்றத்திற்காக அவரைக் குற்றவாளியாகக் கண்டறிந்து, அவருக்கு 12 ஆண்டுகள் கடுமையான சிறைத்தண்டனை விதிக்கவும், ரூ. 10,000/- அபராதம் செலுத்தவும், அதை செலுத்தத் தவறியால் கூடுதலாக ஒரு வருடம் கடுமையான சிறைத்தண்டனை விதிக்கவும் தண்டனை விதிக்கப்பட்டது. மேல்முறையீட்டில், தண்டனையை உறுதி செய்த உயர்நீதிமன்றம், இதச பிரிவு 376 இன் கீழ் தண்டனையை 07 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டனையாகக் குறைத்து, ரூ.10,000/- அபராதம் செலுத்தும் உத்தரவை அப்படியே தக்க வைத்துக் கொண்டது. மேலும், குற்றவியல்

சட்டப்பிரிவு 357-ன் படி, பாதிக்கப்பட்டவருக்கு ரூ. 15,000/- செலுத்தி இழப்பீடு வழங்க வேண்டும் என்று மேல்முறையீட்டாளருக்கு உத்தரவிடப்பட்டது. மேற்கூறிய சூழ்நிலைகளில், மேல்முறையீட்டாளருக்கு இறுதியாக நிர்ணயிக்கப்பட்ட தண்டனை 7 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத்தண்டனை என்பது மறுக்க முடியாத நிலைப்பாடு ஆகும். அபராதத்தை செலுத்தத் தவறியதற்காக அவர் மேலும் ஒரு வருட சிறைத் தண்டனையை அனுபவிக்க வேண்டியிருந்தது என்பது உண்மைதான். ஆனால், 24.4.2022 தேதியிட்ட ஆணையுறுதி ஆவணத்தில், மேல்முறையீட்டாளருக்கு வழங்கப்பட்ட தண்டனை குறைப்பு காலத்தை குறிப்பிடுவதில், வேண்டுமென்றே தவறியிருப்பதுதான், நமக்கு நெருடலாக இருக்கிறது. மேற்கூறிய சிறை விதிமுறைகளின் பொருந்தக்கூடிய தன்மையின் காரணமாக மட்டுமல்லாமல், வேறு சில அம்சங்களின் காரணமாகவும் இது தீவிரமாக எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். மேல்முறையீட்டாளருக்கு வழங்கப்பட்ட தண்டனை குறைப்பு காலத்தின் உண்மையான காலம் எதுவாக இருந்தாலும், மேற்கூறிய சூழ்நிலைகளில் தண்டனை குறைப்பிற்கான அவரது உரிமை மறுக்க முடியாதது என்பது உண்மைதான். சிறைக்காப்பு சான்றிதழின்படி, 9.11.2021 நிலவரப்படி சிறை தண்டனை குறைப்பு 2 ஆண்டுகள், 5 மாதங்கள் மற்றும் 26 நாட்களாக இருந்தது. 24.04.2022 தேதியிட்ட ஆணையுறுதி ஆவணத்தின் சான்றாளர், சிறை காப்பு சான்றிதழை வழங்கிய அவர் மேல்முறையீட்டாளருக்கு

தண்டனை குறைப்பு பெற உரிமை இருப்பதை மறுக்கவில்லை என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். மேற்கூறிய ஆணையுறுதி ஆவணத்தில், சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு, தண்டனை குறைப்பு பெற்றவர் எவ்வளவு காலத்திற்கு சிறையில் அடைக்கப்பட்டார் என்பது குறிப்பிடப்படவேயில்லை. இருப்பினும், 21.03.2022 தேதியிட்ட உத்தரவில், இந்த நீதிமன்றம், நவம்பர் 9, 2021 தேதியிட்ட சிறைகாப்பு சான்றிதழின்படி, 10 ஆண்டுகள், 3 மாதங்கள் மற்றும் 16 நாட்கள் சிறைத்தண்டனை அனுபவித்ததாக பதிவு செய்துள்ளது. மேலும், 24.04.2022 தேதியிட்ட ஆணையுறுதி ஆவணத்தின்படி, மேல்முறையீட்டாளர் சட்டப்படி அனுபவிக்க வேண்டியதை விட அதிகமான சிறைத்தண்டனை அனுபவித்துள்ளார். மேற்கூறிய ஆணையுறுதி ஆவணத்தின் பத்தி 17 பின்வருமாறு வழங்கப்பட்டுள்ளது:

> "மனுதாரர் அனுபவித்த மொத்த தண்டனை (தண்டனை குறைப்பு காலம் நீங்கலாக) 8 ஆண்டுகள் 1 மாதம் 29 நாட்கள் ஆகும்."
>
> முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

13. நாம் இப்போது இன்னொரு முக்கியமான அம்சத்தை பரிசீலிப்போம். 24.04.2022 தேதியிட்ட ஆணையுறுதி ஆவணத்தை மென்நகல், எதிர்மேல்முறையீட்டாளர் 19.07.2018 தேதியிட்ட உயர்நீதிமன்ற தீர்ப்பைப் பற்றி

அறியாதத்தைப் போல பாவிக்கிறார் என்பது தெரியவரும். 30.07.2018 அன்று ஜாஷ்பூர் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதிக்கு உயர்நீதிமன்றம் தீர்ப்பைத் தெரிவித்திருந்தாலும், அது சிறை அதிகாரிகளுக்குத் தெரிவிக்கப்படவில்லை என்றும், இந்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட மார்ச் 4, 2022 தேதியிட்ட உத்தரவைத் தெரிவித்த பின்னர், மார்ச் 10, 2022 அன்று உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் எதிர்மேல்முறையீட்டாளர் கூறுகிறார். 24.04.2022 தேதியிட்ட ஆணையுறுதி ஆவணத்தில் கூறப்பட்ட அறிக்கை மற்றும் அதனுடன் இணைக்கப்பட்ட ஆவணங்கள், மேற்கூறிய கூற்றுக்களின் பொய்யானத் தன்மையை வெளிப்படுத்தும் என்று நாங்கள் எந்த தயக்கமும் காட்டவில்லை. மேல்முறையீட்டாளருக்கு விதிக்கப்பட்ட தண்டனையை குறைத்து உயர்நீதிமன்றம் 2018 ஜூலை 19 அன்று வழங்கிய தீர்ப்பைப் பற்றி அறியாததது போல் எதிர்மேல்முறையீட்டாளர் எவ்வாறு பாவனை செய்ய முடியும்.

14. அம்பிகாபூர் மத்திய சிறைச்சாலை கண்காணிப்பாளரின் உயர்நீதிமன்ற சட்ட பணிகள் குழுவின் செயலாளருக்கு 20.01.2020 தேதியிட்ட கடிதமான இணைப்பு-ஏ 1ல் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது

"மனுதாரரின் - ரெப் : கடித எண் எப்.எண்.2477 / CGSLSA / தண்டனை கைதிகள்/ 2018 / பிலாஸ்பூர் தேதி 28-092018 மற்றும் கடித L/24/2018 –மனுதாரர் /தேதி 27.09.2018 - மின்னஞ்சல் மூலம் பெறப்பட்டது"

வேண்டுமென்றே அல்லது வேறுவிதமாக அத்தகைய ஒரு குறிப்பைச் செய்த பிறகும், எதிர்மேல்முறையீட்டாளர் அந்த கடிதங்களை 24.04.2022 தேதியிட்ட ஆணையுறுதி ஆவணத்துடன் சேர்த்து வழங்கவில்லை. 24.04.2022 தேதியிட்ட ஆணையுறுதி ஆவணத்துடன் சேர்த்து சமர்ப்பிக்கப்பட்ட 20.01.2020 தேதியிட்ட A-1 இணைப்பு பின்வருமாறு கூறுகிறது:-

சிறைக் கண்காணிப்பாளர் அலுவலகம், மத்திய சிறைச்சாலை, அம்பிகாபூர், சர்குஜா (சி.ஜி.)

கடித எண் - 590/கல்யாண்/2020, அம்பிகாபூர்

தேதி: 20.01.2020

பெறுநர்

செயலாளர்,

உயர்நீதிமன்ற சட்ட உதவி ஆணைக்குழு,

உயர்நீதிமன்ற வளாகம், போட்ரி, பிலாஸ்பூர் (சி.ஜி)

குற்றவாளி கைதி போலா குமார், தகப்பன் பெயர் பர்ஜு ராம் குமார் என்பவரின் மேல்முறையீட்டிற்கான சிறப்பு அனுமதி மனு (குற்றவியல்) தாக்கல் செய்தல் - சார்பாக.

மனுதாரரின் - ரெப் : கடித எண் எப்.எண்.2477 / CGSLSA / தண்டனை கைதிகள்/ 2018 / பிலாஸ்பூர் தேதி 28-092018 மற்றும் கடித L/24/2018 – மனுதாரர் /தேதி 27.09.2018 - மின்னஞ்சல் மூலம் பெறப்பட்டது.

ஐயா,

போலா குமார், தகப்பன் பெயர் பார்ஜு ராம் குமார் மகன், கிராமம் தமமுண்டா ஃபார்சபஹார், காவல் நிலையம் ஃபார்சபஹார், மாவட்ட ஜாஷ்பூர் (சி.ஜி) என்ற தண்டனை கைதி, அமர்வு வழக்கு எண் 04/2014 இல் கற்றறிந்த சிறப்பு நீதிபதி நீதிமன்றம், ஜஷ்பூர் மாவட்டம் (சி.ஜி.) யினால் இதச பிரிவு 376 இன் கீழ் 29.11.2014 அன்று ஆயுட்கால சிறை தண்டனையுடன் குற்றத் தீர்ப்பு பெற்று, அவரது குற்றவியல் மேல்முறையீடு எண் 110/2015 பிலாஸ்பூரில் உள்ள சத்திஸ்கர்

உயர்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டதையடுத்து, அவர் இந்த சிறைச்சாலையில் தண்டனை அனுபவித்து வருகிறார் என்று பணிந்துரைக்கப்படுகிறது. அந்த குற்றத்தீர்ப்பு பெற்ற கைதி சட்ட உதவி மூலமாக மாண்புமிகு உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீட்டிற்கான சிறப்பு அனுமதி கோரி தாக்கல் செய்ய விரும்புகிறார்.

எனவே, (01) வக்காலத்துநாமா, (2) சிறப்பு அனுமதி மனுவிற்கான ஆணையுறுதி ஆவணம், (3) தடுப்புக்காவல் சிறைச் சான்றிதழ்,(4) சட்ட உதவிக்கான ஆணையுறுதி ஆவணம், (5) தாமதத்தை மன்னிக்கக் கோரி மனு, (06) மு.த.அ., கற்றறிந்த விசாரணை நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்டத் தீர்ப்பின் நகல், மாற்ற வாக்குமூல ஆவணங்களின் நகல்கள், (07) சட்ட உதவி பணிக்கான விண்ணப்பம் ஆகிய சம்மந்தப்பட்ட ஆவணங்களை தங்களுக்கு அனுப்பி, (01) மாண்புமிகு உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு (02) மாண்புமிகு உயர்நீதிமன்றத்தின் ஆவண புத்தகம் மற்றும் (03) ஆங்கில மொழிபெயர்ப்பு ஆகிய மீதமுள்ள ஆவணங்களை அளித்து, மாண்புமிகு உச்சநீதிமன்றத்தில் (குற்றவியல்) மேல்முறையீட்டிற்கான சிறப்பு அனுமதி மனு தாக்கல் செய்யக்கோரி தாழ்மையுடன் பணிந்துரைக்கப்படுகிறது.

கையொப்பமிடப்பட்டது தெளிவில்லை

சிறைக் கண்காணிப்பாளர்

மத்திய சிறைச்சாலை அம்பிகாபூர்

சர்குஜா சத்திஸ்கர்

ஒப்புதல் எண் 590-A/வெல்பர்/2020, அம்பிகாபூர்,

தேதி: 20.01.2020.

தகவலுக்காக செயலாளர், மாவட்ட சட்ட உதவி பணிகள் ஆணைக்குழு, சர்குஜா மாவட்டம், அம்பிகாபூர் (சி.ஜி.) நகல் அனுப்பப்படுகிறது.

கையொப்பமிடப்பட்டது தெளிவில்லை

சிறைக் கண்காணிப்பாளர்

மத்திய சிறைச்சாலை அம்பிகாபூர்

சர்குஜா சத்திஸ்கர்

(முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது)

15. அத்தகைய ஒரு கடிதத்தை 20.01.2020 அன்று எழுதிய பின்னர், குறிப்பாக குற்றவியல் மேல்முறையீடு எண் 110/2015 இல் சத்திஸ்கர் உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்து அளித்த தீர்ப்பை எதிர்த்து உச்சநீதிமன்றத்தின் முன் சிறப்பு அனுமதி மனு தாக்கல் செய்யக்கோரி உயர்நீதிமன்ற சட்டப்பணிகள் ஆணைக்குழுவிற்கு வேண்டுகோள் விடுத்தப்பிறகு, மத்திய சிறைத்துறை கண்காணிப்பாளர், அம்பிகாபூர் குற்றவியல் மேல்முறையீடு எண் 110/2015 இல் 19.7.2018 தேதியிட்ட தீர்ப்பில் மேலும் தலையிடாத நிலையில், எந்தவொரு சந்தர்ப்பத்திலும், அந்த தீர்ப்பின் அடிப்படையில் அனுமதிக்கப்பட்ட சிறைத்தண்டனை காலம் முடிவடைந்தவுடன், தொடரப்பட வேண்டிய நடவடிக்கை குறித்து அறியாமையைக் காட்ட முடியாது. 19.07.2018 தேதியிட்ட தீர்ப்பிற்கு இணங்காததற்கு எந்த நியாயமும் இல்லை. இந்த நீதிமன்றத்தின் 2022 மார்ச் 4 ஆம் தேதியிட்ட உத்தரவைப் பெற்றுக் கொண்டவுடன், விரைவாக நடவடிக்கை எடுக்க முடிந்தால், 24.4.2022 ஆம் தேதியிட்ட ஆணையுறுதி ஆவணத்தின் 11 முதல் 13 வரை உள்ள பத்திகளில் விளக்கப்பட்டுள்ளபடி, அத்தகைய நடவடிக்கை ஏன் அனுமதிக்கப்பட்ட சிறைத்தண்டனை காலம் முடிவதற்கு முன்னர் அல்லது குறைந்தபட்சம் உடனடியாக செய்யப்படவில்லை? அவர் சிறைச்சாலைச் சான்றிதழில் கூறப்பட்டுள்ளபடி,2 ஆண்டுகள் தண்டனை குறைப்பு பெற வேண்டும் என்றால், சம்மந்தப்பட்ட சிறை விதிகளின் படி

அவ்வாறு ஈட்டிய தண்டனை குறைப்பு காலம் போக தண்டனை மற்றும் அபராதம் கட்டத் தவறியதற்காக கூடுதல் ஒரு வருட சிறந்தண்டனைக்கான காலம் முடித்த பின்னர், 8 வருடங்கள், 1 மாதம் மற்றும் 29 நாட்கள் சிறைத்தண்டனை விதிக்கப்படுவதற்கு முன்பே அவர் விடுதலை செய்யப்பட்டிருக்க வேண்டும்.

16. சத்தீஸ்கர் உயர்நீதிமன்றத்தின் 19.07.2018 தேதியிட்ட தீர்ப்பை எதிர்த்து எதிர்மனுதாரர் அல்லது பாதிக்கப்பட்டவர் மேல்முறையீடு செய்ததாக எந்த வழக்கும் இல்லை. மேற்கூறிய சூழ்நிலைகளில், சாட்சியமளிப்பவர் மனச்சான்றுக்கு மாறாக உண்மைக்குப் புறம்பானதை கூறியதாக மட்டுமே கருத முடியும். மேற்கூறிய சூழ்நிலைகளில், மேற்கூறிய தீர்ப்பை நிறைவேற்றவும், சட்டப்படி அனுமதிக்கப்பட்ட தண்டனைக் காலம் முடிவடைந்தவுடன் மேல்முறையீட்டாளரை விடுவிக்கவும் உரிய நடவடிக்கைகளை எடுக்க தவறியதற்கு எந்தவிதமான நியாயமான காரணமும் இல்லை. மேல்முறையீட்டாளருக்கு இந்த வழக்கில் தண்டனைக் குறைப்பு பெற உரிமை இல்லை என்று காட்ட எதிர்மேல்முறையீட்டாளருக்கு எந்த காரணமும் இல்லை. அம்பிகாபூர் மத்திய சிறைச்சாலை கண்காணிப்பாளரால் வழங்கப்பட்ட காவல் வைப்பு சான்றிதழின் அடிப்படையிலும், சத்தீஸ்கர் மாநிலத்தில் நடைமுறையில் உள்ள சிறை விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள

வகையங்களின் அடிப்படையிலும், மேல்முறையீட்டாளருக்கு இருக்கும் தண்டனைக் குறைப்பு பெறும் உரிமை மறுக்க முடியாதது, உண்மையில், அது எதிர்மேல்முறையீட்டாளரால் எதிர்க்கப்படவும் இல்லை. மேற்கூறிய சிறை விதிகள், 1968-ன் விதி 715-ன் படி, இந்த விதிகளின் கீழ் ஒரு கைதிக்கு வழங்கப்படும் மொத்த தண்டனை குறைப்பு, மாநில அரசின் சிறப்பு ஒப்புதலின்றி, அவரது தண்டனையின் மூன்றில் ஒரு பங்கை தாண்டக்கூடாது. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், இது வழக்கமாக வழங்கக்கூடிய அதிகபட்ச தள்ளுபடி.

17. இங்கு மேல்முறையீட்டாளர் ஒரு கடுமையான குற்றத்தில் குற்றவாளி எனக் தீர்வளிக்கப்பட்டார் என்ற பொருண்மையை நாம் மறந்துவிடவில்லை. ஆனால், ஒரு தகுதி வாய்ந்த நீதிமன்றம் ஒரு குற்றஞ்சாட்டபட்டவருக்கு குற்றத் தீர்ப்பு அளித்து, தண்டனை அளித்தப்பின்னர், மேல்முறையீட்டில், தண்டனை உறுதி செய்யப்பட்ட பின்னர் தண்டனை மாற்றப்பட்டு, மேல்முறையீட்டு தீர்ப்பு இறுதியானதாகிவிட்டால், குற்றவாளியை சட்டபூர்வமாக அந்த மேல்முறையீட்டு தீர்ப்பின் அடிப்படையில் தடுப்புக்காவலில் வைக்கக்கூடிய காலம் வரை மட்டுமே சிறையில் வைத்திருக்க முடியும். அத்தகைய ஒரு குற்றவாளி விடுதலை செய்யப்பட்ட நாளுக்கு பிறகும் தடுப்புக் காவலில் வைக்கப்படும்போது, சட்டத்திற்கு புறம்பான முறையில் சிறையில் அல்லது

தடுப்புக்காவலில் வைக்கப்படுவது ஆகும். இதனால், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் வகுமுறைக்கூறு 19 மட்டுமல்லாமல், 21 வது வகுமுறைக்கூறும் மீறப்படும். இதுவே மேல்முறையீட்டாளரால் மிக நீண்ட காலமாக அனுபவிக்கப்பட்டது. மேல்முறையீட்டாளர் ஒரு இளைஞர் என்ற உண்மையைக் கருத்தில் கொண்டு, தண்டனைக் காலத்திற்கு அப்பால் இந்த நீண்ட மற்றும் சட்டவிரோத சிறைத்தண்டனை, சுதந்திரமாகச் நடமாடும் உரிமையை நீண்ட காலமாக சட்டவிரோதமாக பறித்து வைத்திருப்பதையும், இதன் மூலம் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 19 (டி) வகுமுறைக்கூறின் கீழ் உரிமை மீறல், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 21 வது வகுமுறைக்கூறின் கீழ் வாழ்க்கை மற்றும் தனிப்பட்ட சுதந்திரத்திற்கான உரிமை மீறல் மற்றும் அத்தகைய கூடுதல், சட்டவிரோத தடுப்பு காரணமாக ஏற்படும் மன வேதனை மற்றும் வலி ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, மேல்முறையீட்டாளருக்கு பண அடிப்படையில் இழப்பீடு வழங்க உரிமை உண்டு என்று நாங்கள் கருதுகிறோம்.

18. தற்போதைய விசாரணை இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் வகுமுறைக்கூறு 32 இன் கீழ் நடைபெறவில்லை என்பதை நாங்கள் அறிவோம். இது ரசியலமைப்புச் சட்டத்தின் வகுமுறைக்கூறு 136 இன் கீழ் உள்ளது. குற்றவியல் விசாரணை முறைச் சட்டத்தின் 386 வது பிரிவை

(சுருக்கமாக "கு.வி.மு.ச.") குறிப்பிடுவது பொருத்தமானதாக இருக்கும் என்று நாங்கள் கருதுகிறோம். கூறு (ஏ) குற்றவாளி அல்ல என்றத் தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்யும் அதிகாரங்களைக் குறிக்கிறது. கூறு (பி) குற்றத் தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்யும் அதிகாரங்களைக் குறிக்கிறது. கூறு (சி) தண்டனையை அதிகரிப்பதற்கான மேல்முறையீட்டு அதிகாரத்தையும், கூறு (டி) வேறு எந்த உத்தரவுகளிலிருந்தும் மேல்முறையீடு செய்வதற்கான மேல்முறையீட்டு அதிகாரத்தையும் கையாள்கிறது.

இப்போது, கூறு (இ), கூறு (ஏ) முதல் (டி) வரை போலல்லாமல், எந்த குறிப்பிட்ட மேல்முறையீட்டை எந்த திருத்தத்தை அல்லது எந்தவொரு விளைவு அல்லது தற்செயலான உத்தரவைச் ஏற்படுத்த எந்தவொரு அதிகாரமும் நியாயமான அல்லது சரியானதாக இருக்கலாம் என்று கூறவில்லை. இவ்வாறான குறிப்பிட்ட குறிப்பு இல்லாமையால் எட்டப்படக்கூடிய முடிவு என்னவென்றால், கூறு (இ) ல் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரம், கூறு (அ) முதல் (ஈ) வரை குறிப்பிடப்பட்டுள்ள நான்கு வகை மேல்முறையீடுகளில் ஏதேனும் ஒன்றின் கீழ் வரும் பொருத்தமான வழக்குகளில் கிடைக்கும். தண்டனையை அதிகரிப்பது மற்றும் தண்டனையை விதிக்கப்படுவது தொடர்பாக, கூறு (இ) இன் கீழ் அதிகாரத்தை பயன்படுத்துவது தொடர்பாக கூறு (டி) இரட்டை நிபந்தனைகள் கட்டுப்பாடுகளை

கொண்டுள்ளன என்ற உண்மை எங்கள் கருத்தை வலுப்படுத்துகிறது. எமது கருத்துப்படி, அரிதான சந்தர்ப்பங்களில் மட்டுமே அதற்கான அதிகாரத்தை பயன்படுத்த முடியும். இந்த வழக்கில், 19.07.2018 தேதியிட்ட உயர்நீதிமன்றத்தின் மேல்முறையீட்டு தீர்ப்பை அறிந்த பின்பும், மேல்முறையீட்டாளர் சட்டப்படி அனுமதிக்கப்பட்ட சிறைத்தண்டனைக் காலத்தை விட அதிகமான காலம் சட்டவிரோதமாக சிறையில் அடைக்கப்பட்டிருப்பதை நாங்கள் கண்டறிந்தோம். மேலே குறிப்பிட்டுள்ளபடி, அவர் 16.03.2022 அன்று தான் விடுவிக்கப்பட்டார், இது 19.07.2018 தேதியிட்ட தீர்ப்பின் அடிப்படையில் அனுமதிக்கப்பட்ட தண்டனைக் காலத்தை விட அதிகமாக உள்ளது. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், அவர் 19.07.2018 தேதியிட்ட தீர்ப்பின் அடிப்படையில் அனுமதிக்கப்பட்ட சிறைத்தண்டனை காலத்தை அனுபவித்தார். மேல்முறையீட்டாளர் ஒரு இளைஞர், அவர் அத்தகைய கூடுதல், சட்டவிரோத தடுப்புக் காவலில் இருப்பதன் காரணமாக மன வேதனை மற்றும் வலியைத் தவிர அடிப்படை உரிமைகளின் நீண்ட மற்றும் சட்டவிரோத பறிப்பை அனுபவித்தார். இது ஒரு நியாயமான அல்லது முறையான ஒரு விளைவு அல்லது தற்செயலான உத்தரவை பிறப்பிக்கக்கூடிய ஒரு வழக்கு அல்ல. அம்பிகா குவாரி வொர்க்ஸ் எதிர் குஜராத் மாநிலம் (AIR 1987 SC 1073), இந்த நீதிமன்றம், "அனைத்து விளக்கங்களும் சட்டத்தின் நோக்கத்தை நிறைவேற்றவும் உதவவும் வேண்டும்" என்று கூறியது. எந்தவொரு

சட்டத்திலும் உள்ள எந்தவொரு விதிமுறையையும் விளக்கும் போது, குறிப்பாக நியாயமான அல்லது சரியான உத்தரவுகளை பிறப்பிக்க அந்த விதிமுறையின் கீழ் அதிகாரத்தை வழங்கும்போது இந்த உடைமை பொருந்தும்.

19. இந்த வழக்கின் பின்னணியில் எ.ஆர்.அந்துலே எதிர் ஆர்.எஸ்.நாயக் [(1988) 2 SCC 602] என்ற வழக்கில் இந்த நீதிமன்றத்தின் தீர்ப்பைக் குறிப்பிடுவதும் மிகவும் பொருத்தமானது. அதேபோல் இந்த நீதிமன்றம் சில வெளிப்படையான சட்டவிரோதமான அல்லது சில தெளிவான அநீதி விளைவித்ததாக நிரூபிக்கப்படும் போது பொருத்தமான நிவாரணத்தை வழங்க முடியும். அத்தகைய அதிகாரத்தை, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் வகுமுறைக்கூறு 142 அல்லது அரசியலமைப்பின் பாதுகாவலராக உள்ளார்ந்த அதிகாரங்கள் மூலம் தீர்மானிக்க முடியும்.

அவரது உரிமையியல் நிவாரணம் தொடர்பாக எதுவும் குறிப்பிடாமல், பணியின்போது அதிகாரிகளால் செய்யப்பட்ட செயல் அல்லது செய்யத் தவறிய செயலுக்காக பொறுப்பாக, ரூ.7.5 லட்சம் (ரூபாய் ஏழு லட்சத்து அறுபதாயிரம்) இழப்பீடு அரசு செலுத்த உத்தரவு பிறப்பிப்பது நியாயமானதும் சரியானதும் ஆகும். மேற்கண்டவாறு மாநிலம் மறைமுகமாகப் பொறுப்பேற்றுக்

கொண்டாலும், மாநிலம் தவறு செய்த அதிகாரிக்கு(களுக்கு) எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதையும் தெளிவுபடுத்துகிறோம்.

மேல்முறையீடு மேற்கூறிய விதிமுறைகளின்படி தீர்ப்பளிக்கப்பட்டது.

விண்ணப்பங்கள் ஏதேனும் நிலுவையில் இருந்தால், அவையும் முடித்து வைக்கப்படுகின்றன.

மேல்முறையீடு முடித்து வைக்கப்படுகிறது.

பொறுப்புத்துறப்பு

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கும் பயன்படுத்திக் கொள்வதற்கும் உட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்."